


முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்கள், சாதனைகளால் ஈர்க்கப்பட்டு அவர்களுடைய நல்லாட்சியின் தலைமையை யேற்று, நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை புறநகர் அ.தி.மு.க.எம்.ஜி. ஆர்.மன்ற இணை செயலாளர் ராஜகோபால் அக்கட்சியில் இருந்து விலகியும் மேலும் அ.தி.மு.க.வில் இருந்து வடக்கு விஜயநாராயணன் மணிகண்டன், ஜோதிபுரம் செல்வந்தர் ஆகியோரும் அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், நாங்குநேரி மேற்கு ஒன்றியச் செயலாளர் சுடலைக்கண்ணு, மறுகால் குறிச்சி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் புஷ்பாண்டி ஆகியோர் உள்ளனர்.



கோவை, திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்று வந்த விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு விசைத்தறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. பேச்சுவார்த்தையின் போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், தொழிலாளர்கள் துறை அதிகாரிகள் சாந்தி, பிரேமா, கோவை மாநகர மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### உழவர்கரை தொகுதியில்

# இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## புதுவை மாநில அமைப்பாளர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

புதுவை. ஏப் 22 -

புதுச்சேரி மாநில உழவர்கரை தொகுதியில், தொகுதி செயலாளர் கலிய.கார்த்திகேயன் ஏற்பாட்டின்பேரில் இல்லம்தேடி மாணவரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் நேற்று காலை தொடங்கியது.

மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன் முன்னிலையில் நடைபெற்ற உறுப்பினர் சேர்க்கை முகாமில், மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இல்லங்கள் தோறும் நடந்து சென்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள் மற்றும் சலுகைகளை எடுத்துரைத்தும், அதேபோல் கழக ஆட்சி புதுச்சேரி மாநிலத்தில் அமைந்தால் மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்படும் என உறுதியளித்து, மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை படிவங்களை மாணவ, மாணவிகளிடம் கொடுத்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆர்வமுடன் தங்களை திமுக மாணவர் அணியில் இணைத்துக் கொண்டனர். மேலும் நீட் தேர்வுக்கு ஆதரவாக பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து செயல்படும் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து துண்டு பிரசு ரங்களை பொதுமக்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் அருட்செல்வி, அவைத்தலைவர் விஜயரங்கன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் அமுதன், தமிழ் மகள் ஜான்சி ராணி, தலைமை கழக இளம் பேச்சாளர் வெற்றிச்செல்வன், மாநில துணை அமைப்பாளர்கள் சிவராமன், அம்பு ரோஸ், அன்பு மாறன், சுகுமார், அன்புச்செல்வம், மனோகர்,

தொகுதி துணைச் செயலாளர் பானு, பொருளாளர் செந்தமிழ் செல்வன், மாநில பிரதிநிதி அகிலன், வழக்கறிஞர் அணி துணைத் தலை வர்கள் தாமோதரன், திருநா வுக்கரசு, கிளைச் செயலாளர்கள் செல்வராஜ்,

அன்பு செல்வம், ராதாகிருஷ்ணன், கலியபெருமாள், முருகன், கங்காதரன், ஈஸ்டர் ராஜ், முருகன், அன்பு, ஆறுமுகம், ரங்கநாதன், சுகுமார், ரவி, தொகுதி மகளிர் அணி எவிலின், வசந்தி, கழகத்தின் மூத்த முன்னோடிகள் குமரேசன், சிவா, பன்னீர், ஜானகிராமன், தொகுதி இளைஞர் அணி ஆனந்த், ராஜேஷ், அரவிந்த், லோகேஷ், ஆகாஷ், நாராயணசாமி, தொகுதி மாணவரணி வெங்கட், விஜய், வேலவன், நிர்மல், ராஜேஷ், ஜோன்ஸ், சரவணன், கீர்த்தி, கார்த்திக், மணி உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சியே தொடரட்டும் என்கிற மனநிலையில் வாக்காளர்கள்!

# பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஏப். 22 -

தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சியே தொடரட்டும் என்கிற மனநிலையில் வாக்காளர்கள் இருக்கும் நிலையில் பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. அது வருமாறு:


தினகரன்
ஏப்ரல் 21, 2025 திங்கட்கிழமை
தொடரட்டும் பொற்காலம்

இந்தித் திணிப்பு என்ற வைரசை, அண்ணா காலம் தொட்டு தி.மு.க. எதிர்த்து போராடி வருகிறது. இந்தித் திணிப்பு என்ற அஸ்திரத்தை ஒன்றிய அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளும் போது தி.மு.க. அதை துணிந்து எதிர்த்து போராடியுள்ளது. மராட்டிய மாநிலத்தில் சிவசேனா போன்ற கட்சிகள் கூட பாராட்டும் அளவுக்கு இந்தி எதிர்ப்பில் தி.மு.க. தனது பங்களிப்பை செய்து வருகிறது. சமீபத்தில் தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகையை கணக்கில் கொண்டு தமிழ்நாட்டின் தொகுதிகளை குறைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போதும் முதல் ஆளாக களம் இறங்கியது தி.மு.க.தான். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்த மறுசீரமைப்பில் பாதிப்புக்குள்ளாகும் கேரளம், தெலுங்கானா, கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களையும் கைகோர்த்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குரல் எழுப்பினார். மக்கள் தொகை பெருக்கம் என்ற நெருக்கடியை, மனிதவள ஆற்றல் என சாதகமாக மாற்றிய தமிழ்நாட்டிற்கு இப்படியொரு தண்டனையா என அவர் எழுப்பிய கேள்வி ஒன்றிய அரசையே உலுக்கியது. மறுசீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகையை காரணம் காட்டி தொகுதிகளை குறைத்தால், இந்தியாவின் மக்கள் தொகை வருங்காலங்களில் பன்மடங்கு பெருகவே வழிவகுக்கும்.

நீட் தேர்வு என்னும் அரக்கன் தி.மு.க. ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டிற்குள் கால் பதிக்கவே இல்லை. அ.தி.மு.க. ஆட்சியில்தான் நீட் தேர்வு திணிக்கப்பட்டது. பதவியை காப்பாற்ற, அ.தி.மு.க. தலைவர்கள் ஒன்றிய அரசின் கைப்பாவையாக அப்போது மாறி போனார்கள். ஆரியத்திற்கு முந்தைய பண்பாடாக காட்சியளிக்கும் திராவிடத்தை ஆய்வு பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும் நிலைநாட்ட இப்போது தி.மு.க. முயற்சி எடுத்து வருகிறது. அதற்காக சிந்து சமவெளி நாகரீக இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களை புரிந்து கொள்ள வழி வகை செய்வோருக்கு ஒரு மில்லியன் டாலர் பரிசுத் தொகையையும் முதல்வர் அறிவித்தார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இப்போது முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் உள்ளது. ரூ.10 லட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, பொருளாதாரம் முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது. கூட்டணி கட்சிகளின் ஆலோசனைகளை ஏற்று, தமிழ்நாட்டின் மதுபானக் கொள்கையை மாற்றவும், போதை பொருட்களின் பயன்பாட்டை குறைக்கவும் அரசு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை கடந்த சில மாதங்களாக ஒரு பச்சையான பா.ஜ.க. காரராக தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு செயல்படும் கவர்னர் ஆர். என்.ரவி அரசு ஏற்றிய சட்டங்களை முடக்கியபோது, அதையும் சுப்ரீம் கோர்ட் வரை சென்று தமிழ்நாட்டின் உரிமையை முதல்வர் நிலைநாட்டியுள்ளார். ஒரு தபால்காரரின் பணியை மட்டுமே கவர்னர் மேற்கொள்ள வேண்டும் என்ற அவரது அதிகாரத்தை வரையறுத்ததும் தமிழ்நாடு தான்.

இந்நிலையில் வெறுப்பு அரசியலை விதைத்து வரும் ஒன்றிய அரசு, தனது கடந்த கால கைப்பாவையான அ.தி.மு.க.வோடு மீண்டும் கூட்டணி வைத்து கொண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் என்ற கோஷத்தை முன்வைக்கிறது. அ.தி.மு.க. பாஜ கூட்டணி தமிழகத்தில் ஏற்கனவே இருமுறை தொடர்ச்சியாக தோல்வி அடைந்த கூட்டணிதான்.

ஒரு மாறுதலுக்காக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இருவரும் தனித்தனியே நிற்பது போல் கள்ள கூட்டணி அமைத்து கொண்டு தேர்தலை சந்தித்தனர். அப்போது தோல்வியே கிட்டியது. வாக்காளர்கள் தி.மு.க. தலைமையிலான பொற்கால ஆட்சி தொடரட்டும் என்கிற மனநிலையில் இருக்கும்போது, பா.ஜ.க.வின் ஜம்பம் தமிழகத்தில் ஒருபோதும் பலிக்காது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோவை - திருப்பூர் மாவட்டங்களில்

# விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் வாபஸ்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - வி.செந்தில்பாலாஜி - என்.கயல்விழி செல்வராஜ் பேச்சுவார்த்தையில் உடன்பாடு!

திருப்பூர், ஏப். 22 -

கோவை திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்று வந்த விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு விசைத்தறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

கோவை. திருப்பூர் மாவட்டங்களில் 2.5 லட்சத்திற்கும் அதிகமான விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. சோமனூர். கருமத்தம்பட்டி, பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 20 ஆயிரம் விசைத்தறி உரிமையாளர்கள். ஜவுளி உற்பத்தியாளர்களிடம் இருந்து நூலை வாங்கி கூலி அடிப்படையில் துணியாக உற்பத்தி செய்து தருகின்றனர். இதனால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், 3 லட்சத்திற்கும் அதிகமானோர் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை பெற்று வருகின்றனர். ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூலி உயர்வு தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தி கூலி நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஜவுளி உற்பத்தியாளர்கள் 2017, 2022 ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தப்படி கூலி உயர்வு வழங்காமல் கடந்த 2014ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கூலியை மட்டுமே வழங்கி வருவதாகவும், கூலியை உயர்த்தி வழங்கக்கோரியும் கோவை,

திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் கடந்த மாதம் 19ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதம் மற்றும் கால வரையற்ற உண்ணாவிரத போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில் சோமனூர் ரகங்களுக்கு 15 சதவீதமும், இதர ரகங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு வழங்க ஜவுளி உற்பத்தியாளர்கள் முன்வந்தனர். இதனை ஏற்று விசைத்தறி உரிமையாளர்களின் வேலைநிறுத்த போராட்டம் மற்றும் உண்ணாவிரத போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது : ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த விசைத்தறி உரிமையாளர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அரசு வேண்டுகோளை ஏற்று ஜவுளி உற்பத்தியாளர்கள் சோமனூர் ரகங்களுக்கு 15 சதவீதமும், பல்லடம் ரகங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை சுமூகமாக முடிவுற்றது. உண்ணாவிரத போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக விசைத்தறி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்பகுதியில் சிறப்பாக தொழில் நடக்க இரு தரப்பினரும் ஒத்துழைப்பு தருவதாக கூறியுள்ளார்கள் என்று அமைச்சர் கூறினார்.

சங்க கூட்டமைப்பின் தலைவர் பூபதி கூறியதாவது : நியாயமான கூலி உயர்வு வேண்டி கடந்த 33 நாட்களாக விசைத்தறி உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக பல கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் அமைச்சர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், சோமனூர் பகுதி ரகங்களுக்கு 15 சதவீதமும், இதர ரகங்களுக்கு 10 சதவீதமும் கூலி உயர்வு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2022 ஒப்பந்தத்தில் இருந்து இந்த கூலி உயர்வு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். உண்ணாவிரத போராட்டத்தையும் வாபஸ் பெற்றுக்கொள்கிறோம். பொதுக்குழு கூடி வேலை நிறுத்தத்தை விலக்கி கொள்வோம். சுமூக தீர்வு ஏற்படுத்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

பேச்சுவார்த்தையின் போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், தொழிலாளர்கள் துறை அதிகாரிகள் சாந்தி, பிரேமா, கோவை மாநகர மாவட்டச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 27 எண் கொண்ட புதிய பேருந்து கள்ளக்குறிச்சி முதல் சின்னசேலம் வழியாக நைனார்பாளையம், எஸ்.நரையூர் வரை செல்லும் கிராம புற பேருந்து சேவையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. நேற்று முன்தினம் கொடி அசைத்து தொடங்கி வைத்து சிறிது தூரம் பேருந்தை இயக்கினார், இதில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் அருள்மொழி, பேரூர்க் கழக செயலாளர் செந்தில்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்டம் தி.மு.க. இளைஞர் அணி கிளை, வார்டு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் இளைஞர் அணி சேர்க்கைக்கான படிவத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஆர்.முருகன், ஆர்.பி.முருகன்,எஸ்.லூயிஸ், ஜெ.ஜெயபால், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் நைனா முகமது, சுந்தரமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராயல் எஸ்.அன்பு, ச.பாலாஜி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பாளையங்கோட்டையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் நோக்குடன், நீட் தேர்வு, மாணவர்களின் கல்வி நிதி முடக்குதல்,மும்மொழிக் கொள்கை, இந்தித் திணிப்பு, நிதி பங்கீட்டில் பாரபட்சம் போன்ற அரசியல் சாசனத்துக்கு எதிரான அடக்குமுறை களை தமிழ்நாட்டின் மீது கட்டவிழ்த்து விடும் மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசையும்,அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நெல்லை மத்திய மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஏற்பாட்டில் பாளை மார்க்கெட் பகுதி கடைகள், பேருந்துகள், சாலைகளில் செல்லும் பொது மக்களிடம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தார். நிகழ்வில் மாலை ராஜா, மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், பேச்சிபாண்டியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.